எம்.சி.ஓபி.எண் : 123/2024 தேதி: 29.01.2026

மசா : 3

பெயர் :சையத்த சாதிக்

த/பெயர் :சையத் மூசா

வயது : 47

**<u>மனுதாரரின் தரப்பில் சாட்சி 3ன் முதல் விசாரணை</u>**

எனது தரப்பில் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நன்கு தெரிந்து கையொப்பம். எனது தரப்பு சான்றாவணங்கள் எனக்கு கொடுக்கப்பட்ட அதிகார கடிதம் மசா ஆ 21 எனது பேன் கார்டு அசலுடன் ஒப்பிடப்பட்டது மசாஆ 2.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஊரப்பாக்கம் நுர் மசூதியில் செயலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் தற்பொழுது 3,4 மாதங்களாக தான் பணியில் உள்ளேன். என்னை மேற்படி மசூதியின் comitte members தான் என்னை நியமித்தார்கள். இந்த விபத்து சம்மந்தமான விவரங்கள் முழுமையாக எனக்கு தெரியும். அவர் எங்களது மசூதியில் வேலை செய்வதால் தெரியும். விபத்து நடந்த நேரம் மற்றும் தேதி 2023 ஏப்ரல் மாதம் தான் விபத்தது நடந்தது. விபத்து நடந்த பிறகு சுமார் ஒரு 11 மணியளவில் தான் எனக்கு செய்தி வந்தது. விபத்து நடந்த நேரம் எனக்கு சரியாக தெரியாது. இந்த விபத்துக்கும் எனக்கு எந்த வித சம்பந்தமும் இல்லை நான் ஜோடிக்கபட்ட சாட்சி என்றால் சரியல்ல. எங்களது மசூதியில் தான் அடிபட்ட நபர் பணியில் இருந்தார்.

**<u>2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இறந்து போன நபர் எங்களது மசூதியில்தான் பணியில் இருந்தார் என்பதை காட்ட எங்களது மசூதியின் வருகை பதிவேடு மற்றும் சம்பளம் பட்டுவாடா செய்யும் பதிவேடு அல்லது வேறு ஏதும் சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது தகப்பனார் அவரது letter pad இல் மேற்படி நபர் எங்களது மசூதியில் தான் பணிசெய்தார் என்பதற்கான சான்று அளித்துள்ளார். அதை நான் இன்று மசாஆ 21 ஆக தாக்கல் செய்துள்ளேன். எங்களது பள்ளிவாசலின் பணி செய்யும் எண்ணிக்கையை காட்டக்கூடிய பதிவேடுகள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி நபருக்கு எங்களது பள்ளிவாசலில் சம்பளம் கொடுக்கபட்டும் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. அவர் எங்களது

மசூதியில் ஒரு 10 முதல்  15 வருடங்களாக பணிசெய்து வருகிறார். மனுதாரருக்கு உதவும் நோக்கத்தில் நான் அவர் இறந்த பிறகு மசாஆ 21 இல் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே மசாஆ 21 ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.